அனுபோக வைத்திய நவநீதம்

திறவுகோல்

முதற் பாகம்

C

LC
N75·1
113872

பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில்
...த்துவநூல் வெளியீட்டுக்குழு
1975

வெளியீட்டுத்தொடர் எண்: 11.

அனுபோக வைத்திய நவநீதம்
திறவுகோல்

முதற்பாகம்

ஆசிரியர்:

ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்

COMPLIMENTARY

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975 விலை ரூ.

முதற் பதிப்பு—1905

இரண்டாம் பதிப்பு :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சி. ம. நூ. வெ. குழு—1975ஆம் ஆண்டு

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு,

இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,

சென்னை-600029.

அச்சிட்டோர் :

சன்ரைஸ் அச்சகம்,

92, காரணீஸ்வரன் கோயில் தெரு,

மயிலாப்பூர், சென்னை-60004.

அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி பி. எஸ்ஸி., அறங்காவலர்.

திரு. என். நாச்சிமுத்து எம். எல். ஏ., ,,

திரு. புலவர் சி. பழனிச்சாமி எம். எல். ஏ., ,,

திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி. எல்.,
துணை ஆசிரியர்—நிர்வாக அதிகாரி

அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ... பொருளாளர்

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம். ... உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி பி.எஸ்ஸி., பி. எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை
சென்னை-600029. ... சிறப்பு அழைப்பினர்

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன் எல்.ஐ.எம்.,
பொறுப்பலுவலர், சித்த மருத்துவ
மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-600010. தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை-600029. செயலர், உறுப்பினர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன் எச். பி. ஐ. எம்.,
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை-600005. உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு எச். பி. ஐ. எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். ,,

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் எல். ஐ. எம்.,
மருத்துவ அலுவலர் ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வட ஆற்காடு. ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி எல். ஐ. எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ,,

8. டாக்டர் ப. சிற்சபை ஆர். ஐ. எம். பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை-600005. ,,

9. பண்டிட் பெ. முத்துகருப்பப் பிள்ளை ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை. ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம் ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை-600012. ,,

11. டாக்டர் என். சேது ரகுநாதன், தமிழ்ப் பேராசிரியர்,
விருதுநகர். ,,

12. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை
முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சை. ,,

சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி, பி. ஏ., ஜி.சி.ஐ.எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன் எல். ஐ. எம்.,
பேராசிரியர், மேல் பட்டப்படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் டி. வி. இரத்தினவேலுசுப்பிரமணியம் பி. எஸ்ஸி.,
எம். டி., எம். ஆர். சி. பி. (லண்டன்), சென்னை–600010.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு

பேராசிரியர் **க. அன்பழகன்** எம். ஏ., அவர்கள்

அளித்த

அணிந்துரை

மூன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால் — வழிவழியாகவும் கற்றறிந்தும் — கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலை பெறுவதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்—இத் துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளுமாறு ஆய்வுகள்மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள்—உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளி வந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும்

மாணவரும் இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப் படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும். எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங் காவல் குழுவினரும்—அதன் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும்— இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளி யீட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத் துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்— பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும்— அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந் தெடுக்கப்பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே அனுபோக வைத்திய நவநீதம்-ஒன்று முதல் பத்து பாகங்களும்—அவற்றின் திறவுகோலும்—ஆகும். இன்று கிடைக்காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் மிகுந்த பயன் தர வல்லதாம்.

இந்நூல்களின் ஆசிரியர்—சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்—இளமை முதலே—தமது முன்னோர்தம் மருத்துவக் கலையைப் பொன்னேபோல் போற்றிப் பயின்று, தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப் பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து—உலகோர்க்குப் பயன்படவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச் செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள்—இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு ஒளி காண்பதற்கு வழி கண்ட வல்லுநரில் அவர் தலை சிறந்தவர் என்பது மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்றலுடனும், நெறியுடனும். பொறுப்புடனும் எளிய இனிய தமிழில்—இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவ உலகம்—ஹக்கீம் அப்துல்லா அவர்கட்கு எந்நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய அனுபோக வைத்திய நவநீதம் முதற் பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

"மிகக் கொடிய நோய்களையும் அறத் தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கின்றார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:

"அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது. ஆனால், நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய்

நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை" என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும், சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமன தோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக் கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு—மருந்து செய்முறைகளை—அரிய நூல் வடிவத்தில் வழங்கிச் சென்ற ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு.

> 'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்'

என்னும் குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர் தம் முயற்சி வளர வாழ்த்துகிறேன்.

சென்னை }
20—3—1975 }

க. அன்பழகன்

இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; அது போல் தமிழ் மருத்துவமுறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச்சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவமுறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின் — நிலநடுக்கம், கடற்கோள் போன்ற — சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில், சில மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும், எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டு கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித்தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில், வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர், 1924 இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்துப் பல கிராம மருத்துவமனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்

துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டபடி கற்பிக்கப் போதிய பாட புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாட புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட் வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசு வழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்ற நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950 இல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி. குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர் களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப்பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங்கோட் டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாடநூல்களும் துணை நூல் களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும் கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப்பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாட நூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (pharmacopiea committee 1966 G. O. M. S. 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற் குழு என்று (G. O. MS. No. 1060 health Dt. 13-6-66) ஒரு குழுவும், திருவருட்பா திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதி களை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும், விரைவில் பயன்காண வேண்டி 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு

என்னும் ஒரு குழுவைத் (G. O. MS. No. 2571 of 23-10-73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப் படி, தட்டெழுத்துப் படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக் குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரதிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத் துறை இயக்குநர் அலுவகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர், அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல்வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் திருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களும் திறவுகோலும் வெளியிடப்படுகின்றன. மேற்படி அனுபோக வைத்திய நவநீதம் என்னும் உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு ஆவார். இவர் சென்னை, ஜார்ஜ் டவுன், அப்பு மேஸ்திரி தெருவில், 12 ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்தார். இவர் தஞ்சை மன்னர் சரபோஜி தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த, யூனானி ஆகிய இருமுறைகளிலும் கைபாகம், செய்பாகம், நோய்த்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்கத் தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருத்துவமனையும், மருந்து செய்சாலையும், அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர் நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரைநடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல் அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதிப்பித்து வெளியிடுவோரின்மையால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன், முன் பதிப்பிலிருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது. இந்தப் பத்து நூல்களின் பெருமை அவைகளைக் கற்று மருந்துழைச் செல்வார்க்கு மிக நன்ருக விளங்கும். அவ்வந் நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனேகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனர் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங் காவலர் குழுத்தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட் கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்குகொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்தமருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலக மொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியாகிய உயர்திரு. வி. எஸ். கோதண்டபாணி பி, எஸ்ஸி., அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன் ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக் குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத் துறை இயக்குநர் டாக்டர். பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், அச்சடிக்கும் தாள்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து மிக விரைவில் கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக் குழுவுக்குத் துணை புரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன் எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்து வரும் புலவர்கள் மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், வை. முரு முத்துக்குமாரசாமி, வே. வாசுதேவன் ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய சித்த மருத்துவர்கள் திரு. ப. சிற்சபை, திரு. கே. சீனிவாசன் திரு. மு. சௌரிராசன் ஆகியோர்க்கும், அந்நூல்களைத் திரட்டித்தர துணைபுரிந்த சித்த மருத்துவர்கள் திரு டி. வி. கல்யாணசுந்தரம், திரு. மு. பூசலிங்கம் ஆகியோர்க்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த திரு. புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக்கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக் குழு பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்த அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந் நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
தலைவர்
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு.

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

முதல்பதிப்பின் முகவுரை

திருவருளின் துணையினுலும், பெரியோர்களின் வாழ்த்தினுலும் அநுபோக வைத்திய நவநீதமென்னும் அரிய நூலின் பத்துப் பாகங் களும் பல ஆண்டுகளாக முயற்சி எடுத்து மிகுந்த முயற்சியுடன் நம்மால் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் நம் நண்பர்கள் பலரும் வரவழைத்துப் பார்த்து அவற்றிலுள்ள முறைகளைச் செய்து அவற்ருலடைந்துவரும் நன்மைகளுக்கோர் அளவில்லை. அவ்வாறு, பலவித நன்மைகள் பெற்று வருவதைப் பலர் கடித வாயிலாகவும், பிறவாற்ருலும் அடிக்கடி எமக்கறிவித்து வருகின்ருர்கள்; அதனுல், நமக்கு மிக்க உள்ள ஊக்கமுண்டாகி மேற்படி மருத்துவ நூலின் பத்துப் பாகங்களையும் முன்னிலும் அதிக மாக விளக்கப்படுத்தி நம் நண்பர்களுக்கு உதவி, மகிழ்ச்சி உண்டாக்க வேண்டுமென்னும் எண்ணம் தோன்றியது. அவ்வாறு உதிக்கவே, எவ்வாறு விளக்கப் படுத்தலாமென்று ஆலோசித்தோம் அவ் வாலோசனையால், 'பத்துப் பாகங்களைக் கொண்ட அனுபோக வைத்திய நவநீதமோ மிகவும் விரிவான நூல்; பெரிய கடல் போன்ற விரிவானது; இதிலோ எண்ணிறந்த நோய்களும், அவற்றிற் பல்லாயிர முறைகளும், இன்னும், அநேக மருத்துவக் கருத்துகளும் அடங்கியிருக்கின்றன; இந்த நோய்க்கு இந்த மருந்து ஆகுமென்பதையும்; கருத்துகள் இந்த இந்தச் செயற்காகும் என்பதையும், இந்த நோய்க்குத் தக்க மருந்து இந்த இடத்திலிருக் கின்றது என்பதையும், இந்த விவரங்கள் அல்லது, இந்த நோய் இந்த இடத்தில் இருக்கிறதென்பதையும் எவரும் சுலபமாகத் தெரிந்து கொள்ளுதல் அருமையாம். எல்லாப் புத்தகங்களையும் முதலிலிருந்து கடைசிவரை படித்தால் மாத்திரம் தெரிந்து கொள்ள முடியும் ஆதலால், இந்தக் கருத்துகள் இந்த இடத்தில் இருக்கின்ற தென்பதை எளிதாக தெரிந்துகொள்ளும் பொருட்டு இப்புத்தகத் தின் பத்துப் பாகங்களிலுமுள்ள மருந்து விவரங்களையெல்லாம் அகராதி முறைப்படி வரிசைப்படுத்தித் திறவுகோலொன்று வெளிப் படுத்திஞல் எல்லாச் செயல் முறைகளுக்கும் மிக்க அனுகூலமாக இருக்கும் என்று ஒரு முடிவு உண்டாயிற்று.

ஆதலால், மேற்படி பத்துப் பாகங்களிலும் அடங்கியிருக்கும் பல்லாயிரம் நோய்களையும் அகராதிமுறையில் வரிசைப்படுத்தி, அந்த அந்த நோய்களுக்கு உபயோகமாகும் மருந்துகளை இந்த இந்த பாகங்களில் இன்னின்ன எண்களில் உள்ளனவென்று விளக்கிக் காட்டி இன்னும், மற்ற விவரங்களையும் இன்னின்ன பாகங்களில் இன்னின்ன எண்களில் இருக்கின்றனவென்றும் விளக்கியெழுதி இத் திறவுகோல் என்னும் நூலை வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

இதில், ஒரே நோயின் பெயர் பற்பல இடங்களிற் பற்பல பெயர்களாக வரும். அவைகளெல்லாம் முறைகளின் பெயர் மாறி வருகின்றபடியே இருந்தால் எளிதாக தெரிந்து கொள்வதற்கு துணையாகுமென்று கருதி புத்தகத்தில் ஆங்காங்கே வருகின்றபடி அந்த அந்த எழுத்துக்களின் வரிசையில் எழுதப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக சுர நோய்க்குச் சில இடங்களில் சுரமென்றும் சில இடங்களில் காய்ச்சலென்றும் வரும். இவைகளில் சுரமென வருபவைகள் சகர வர்க்கத்திலும், காய்ச்சலென்று வருபவை ககர வர்க்கத்திலும் சேர்க்கப்பட்டிருக்கும். இவ்வாறு, பல பெயர்களைக் கொண்டு பல இடங்களில் வரும் நோய்களை எல்லாம் ஒரே நோய் எனக் கொண்டு அந்த அந்த எழுத்துக்களின் வரிசையில் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியது. ஒவ்வொரு முறைகளுக்கும் பின்னே பெரும்பான்மையும் முறைத் தொடர்ச்சி எண்களே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எண்களில்லாத சில முறைகளுக்கு புத்திகத்தின் பக்க எண்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பக்க எண்கள் போடப்பட்ட இடங்களில் (பக்க எண்) என்பது விளக்கப் பட்டிருக்கின்றது. மற்ற இடங்களில் நம்பர்கள் மாத்திரம் வரும். ஒன்றுமில்லாமல் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்களை முறைத் தொடர்ச்சி எண்களென்றும் பக்க எண் குறிப்பிடப்பட்டிருப்பவை களைப் பக்க எண்களென்றும் தெரிந்து, முறைகளைத் தேடிக் கண்டு கொள்ள வேண்டியது. இப் புதுப் பதிப்பில் பக்கங்கள் மிகவும் மாறி இருக்கும்.

இத் திறவுகோலை ஒரே புத்தகமாக முடித்து வெளிப்படுத்தக் கருதியிருந்தோமாயினும் பத்துப் பாகங்களிலும் அளவற்ற நோய்களும், கணக்கற்ற முறைகளும் அடங்கி இருந்தபடியால் அவைகள் எல்லாந் திரண்டு சுமார் 50-பாரங்களுக்கு மேலாகிவிட்டபடியால் புத்தகம் மிகவும் பெரிதாகுமென்றும், விலை அதிகமாகுமென்றும், வாங்குவோர்க்குக் கடினமாயும் பார்க்கச் சிரமமாகவும் இருக்குமென்றும், இரண்டு மூன்று பாகங்களாக வெளிப்படுத்தினால் எல்லா இயல்களுக்கும் ஏற்புடைத்தாக இருக்குமென்றும் நினைத்து ககர வர்க்கம் முதல் முடிவு வரை 20-பாரங்களடங்கிய ஒரு பாகமாக வெளிப்படுத்தி இருக்கிறோம். மற்ற பாகங்களும் இதன் பின்னர் மிக விரைவில் வெளியாகி விடும்.

அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் இத் திறவுகோல் முழுவதையும் முடிவுவரை வாங்கிப் பார்ப்பதனுல் உலகத்தில் இவ்வளவு நோய்களும் இவ்வளவு மருந்துகளுமா ஏற்பட்டிருக்கின்றனவென்று பெரிய வியப்புண்டாகும். மேலும், உலகத்திலுண்டான அளவில்லாத நோய்களில் இன்ன நோய் இன்ன இடத்திலிருக்கின்றதென்பதையும், அதற்குரிய முறைகள் இன்னின்ன பாகங்களில் இன்னின்ன இடங்களிலிருக்கின்றன என்பதையும் வெகு எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். ஒரு நோய்க்கேற்பட்டிருக்கும் அநேக மருந்துகளை ஒரே இடத்தில் ஒரு மணித்துளி நேரத்தில் கண்டு அவற்றில் விருப்பமான ஒன்றை எளிதிற் செய்து கொள்ளலாம். ஒரு நோய்க்கு மருந்து காண வேண்டுமென்ருல் பல புத்தகங்களில் பல இடங்களிற் பார்க்க வேண்டும். அங்ஙனம் பார்ப்பினும் எளிதாக முறைகள் அகப்படுவது வழக்கமான மருத்துவர்களுக்கும் அருமையாம். இத் திறவுகோலும் அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களும் ஒருவர் கையி லிருந்தால் அவ்வித துன்பம் ஒன்றுமிராது. மருத்துவத்தில் அனுபோகமில்லாதவர்களுங்கூட இவற்றின் உதவியைக் கொண்டு ஒரு நோய்க்கு பல முறைகளைத் தெரிந்து பிறர்த் துணையின்றித் தாமே மருத்துவம் செய்து கொள்ளலாம். இத் திறவுகோல், அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் வாங்கி இருக்கும் நண்பர்கள் ஒவ்வொருவர்க்கும் மிக அவசியமானதோடு மற்றையவர்க்கும் முக்கியமாக வேண்டியதாகும். இது ஒவ்வொரு வர்க்கும் எவ்விதத்திலும் எக் காலத்திலும் ஒரு சிறந்த வைத்தியன் போலவும் தோழன் போலவும் நின்று உதவி புரியுமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இத் திறவுகோலை எழுதி முடிப்பதற்குப் பல ஆண்டுகள் சென்றன. பத்துப் பாகங்களிலுமுள்ள முறைகளை எல்லாம் ஆராய்ந்து அவற்றிலுள்ள நோய்களைத் திரட்டி அகராதிமுறையில் செய்து அவற்றிற்காம் முறைகளையும் எண்களுடன் எழுதி விளக்கிக் காட்டும் செயலால் ஏற்பட்ட உடற்துன்பம், உள்ளப்பாடு முதலியவை அதிகம். அவையெல்லாம் இதைப் பார்ப்போர்க்கு ஒருவர் எடுத்துச் சொல்லாமலே நன்கு விளங்கும். இதை அச்சிடத் தொடங்கியவுடனே தாள் விலை ஒன்றுக்கு மூன்ருக ஏறி விட்ட படியால் இதனைக் கொஞ்சம் மட்டக் கடுதாசியில் அச்சிட்டும் இதற் கேற்பட்ட பொருட் செலவோ அதிகம். ஆயினும், நம்முடைய நண்பர்களை உத்தேசித்து மற்ற புத்தகங்களுக்கு ஏற்படுத்தி இருப்பது போலவே இதற்கும் குறைந்த விலையே ஏற்படுத்தி இருக்கின்ருேம்.

ஆகையால், நம் நண்பர்களெல்லோரும், இதற்கு முன் நம்மால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பல சித்த ஆயுள்வேத, யூனானி மருத்துவ நூல்களை வாங்கிப்படித்து அவற்ருலுண்டாகும் நன்மைகளை அடைந்து நம்மைப் பலவிதத்திலும் கனப்படுத்தி வருவது போலஇத் திறவுகோலையும் வாங்கி, அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களும் இல்லாதவர்களாக இருந்தால் அவற்றையும் வரவழைத்துப் பார்த்துப் பல நோய்களின் தன்மைகளை உணர்ந்து அவற்றிற்கான மருந்துகளைச்செய்து அவரவர்களுக்குள்ள நோய்கள் நீங்கப்பெற்று ஆயுள்விருத்தி, வலிமைவிருத்தி முதலிய இம்மைக் குரிய பல வளர்ச்சிகளையும் இனிது பெற்றுச் சுகமாக வாழ்ந்து நமக்கு உற்சாகத்தையும், இன்னும் இது போன்ற புத்தகங்களை வெளிப்படுத்துதற்கான ஊக்கத்தையும் உண்டாக்குவார்களாக. ஆமீன்.

இங்ஙனம்

அக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு,
12, அப்பு மேஸ்திரி தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

786

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

அநுபோக வைத்திய நவநீதம்

திறவுகோல்

கடவுள் வணக்கம்

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்; அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ஸய்யிதில் முர்ஸலீன்; வ ஆலிஹி, வ அஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

நூல்

அகுவைக்கு :—(இது ஒருவகை வயிற்றுநோய்)

பத்தாம் பாகம்

கௌசைப்பேய்ப் பீர்க்குலேகியம், *மு ந. 1454.
குன்மக்கட்டிச்சூரணம் 1456.

அக்கிரம சூதகத்துக்கு :—

இரண்டாம் பாகம்

அப்பிரகபற்பம் 107.

மூன்றும்பாகம்

இலவணதிராவகம் 206, விஷபேதிதிராவகம் 208.

நான்காம் பாகம்

சந்திரப்பிரபாவ செந்தூரம் 519 பூரக்கட்டு 551

ஏழாம்பாகம்

பச்சைக்கற்பூர மெழுகு 966.

---

* மு—ந. முறை நம்பருக்கடையாளமாம். இதற்குக் கீழ் புத்தக முழுவதிலும் முறையின் பெயருக்குப்பின் போட்டிருக்கும் நம்பர்களையெல்லாம் முறை நம்பர் என்று கொள்க. இடையிற் சில இடங்களில் பக்க நம்பர் வரும். அப்படி வருமிடங்களில் (பக்க நம்பர்) என்னும் வாக்கியம் போடப்பட்டிருக்கிறது.

எட்டாம் பாகம்

பெருங்காய லேகியம் 1157.

ஒன்பதாம் பாகம்

சூதகவாயு எள்ளு லேகியம் 1411. சூதகவாயு பட்டை லேகியம் 1412.

அக்கிரம சூலைக்கு :—

மூன்ரும் பாகம்

கறியுப்பு மெழுகு 211.

அக்கினி மந்தத்துக்கு :—(அஜீர்ணமென்பதையும் பார்க்க)

முதற் பாகம்

உலோகசெந்தூரம் 10. தண்டவாள செந்தூரம் 42. காந்த மெழுகு 52. சுயமக்கினி செந்தூரம் 57. ஷை வேறு 58. பஞ்சாக்கினி செந்தூரம் 62. அறுமுக ஜம்பீரகற்பம். பக்கநம்பர்–150. அறுமுக வடகம் 66. தாம்பிரபற்பம் 75. ஷை வேறு 76. ஷை வேறு 84. சூததாம்பிர பற்பம் 92, தாம்பிர செந்தூரம் 93.

இரண்டாம்பாகம்

சுந்திசெய்த சிலாசத்து, பக்கநம்பர் 248. சிலாசத்து செந்தூரம் 235.

மூன்ரும்பாகம்

கறியுப்புபற்பம் 184, கறியுப்புச் செந்தூரம் 191. ஷை வேறு 195. மேற்படி வேறு 196, மேற்படி வேறு 197, மேற்படி வேறு 198, மேற்படி வேறு 199, மேற்படி வேறு 200, கறிபுப்புபற்பம் 212, நவச்சாரபற்பம் 227, அன்னபேதி செந்தூரம் 384, மேற்படி வேறு 385, மேற்படி வேறு 386, பேதிசத்து செந்தூரம் 387.

நான்காம் பாகம்

மார்த்தாண்ட பைரவம் 539.

ஐந்தாம்பாகம்

இரசப்பதங்கம் 679, சரபஞ்சசுரசசெந்தூரம் 711, இரசமெழுகு 738.

ஆரும் பாகம்

கெந்தகசெந்தூரம் 782. கெந்தக ரசாயனம் 798, சீதாம்சரசம் 871.

ஏழாம் பாகம்

திரிபுராதிசெந்தூரம் 1005. சுயமக்கினிசெந்தூரம் 1008. ஷிவேறு 1009 ஷிவேறு 1010. ஷிவேறு 1011. இலகுசுயமக்கினி செந்தூரம் 1013.

எட்டாம் பாகம்

கண்டாதிச் சூரணம் 1091. இஞ்சிரசாயனம் 1092. இஞ்சி லேகியம் 1093. ஷிவேறு 1094.

அக்கினி மந்தம் :—

எட்டாம் பாகம்

நாகராதியுண்டை 1036. பஞ்சதீபாக்கினிலேகியம் 1037. நாகராதிமதனகாமேசுரலேகியம் 1046. கறியாதி தீபனச் சூரணம் 1049. மிளகுலேகியம் 1050. கடுக்காய் முறப்பா 1057. கடுக்காய் நெய் 1059. நெல்லிமுள்ளிலேகியம் 1062. அனூஷ்தா 1063. சீரகப்பாவனை 1068. சீரகாதிலேகியம் 1070. ஷிவேறு 1071. தாளிசலேகியம் 1080. அசுவகெந்திரசாயனம் 1117. சிறுவில்வாதி லேகியம் 1142. அஷ்டாதிச்சூரணம் 1121. இங்குஷ்டாதி உண்டை1122. பெருங்காய லேகியம்1123. பச்சைக்கற்பூராதிச் சூரணம் 1124. பொடுதலைச்சூரணம் 1133, மகாவில்வாதிலேகியம் 1143. பேரீச்சங்காய் லேகியம் 1198.

ஒன்பதாம் பாகம்

அகத்தியர் கோடாசுழி 1228. கிராணிகுக்ஷுமசூரணம் 1378. கிரஹணிதிலதாதிச் சூரணம் 1379. உஷ்ணவாயு ஓமச்சூரணம் 1401. உஷ்ணவாயு பொடுதலை லேகியம் 1402. உஷ்ணவாயு சீரகச் சூரணம் 1408. உஷ்ணவாயுகண்டுச் சூரணம் 1405. உஷ்ணவாயு அடைகஷாயம் 1406. உஷ்ணவாயு உண்டை 1409. உஷ்ணவாயு காயலேகியம் 1410. சூதகவாயு எள்ளுலேகியம். 1411.

பத்தாம் பாகம்

காமாலை காந்த செந்தூரம் 1437. விஷபாக லேகியம் 1448. அஷ்டகுன்ம உண்டை 1462, அஷ்டகுன்மபச்சை வெட்டுப் பற்பம் 1463. ஆமில பற்பமாத்திரை 1473,

அக்குள்களிலுண்டாகும் கட்டிகட்கு :—

ஏழாம் பாகம்

மகாவானமாமெழுகு 991.

அங்குலிவாதத்துக்கு :—

நான்காம் பாகம்

தன்வந்திரி செந்தூரம் 513

ஆறும் பாகம்

ஷண்முக மெழுகு 968

ஒன்பதாம் பாகம்

மணிபேதி 1249

அசதி ரோகங்களுக்கு :—

முதற் பாகம்

சாரலோக செந்தூரம் 13 ஐம்பீரகற்பம் 21 உலோகமண்டூர வட்டு 36, எஃகுசுவர்ண செந்தூரம். 41

இரண்டாம் பாகம்

தங்கபற்பம் 202, மைசாக்ஷி பக்குவம் பக்கநம்பர் 211. தங்கக் களங்கு 214.

நான்காம் பாகம்

இலிங்க செந்தூரம் 500, ஷிவேறு 506.

எட்டாம் பாகம்

அனுஷ்தவா 1063. எலுமிச்சம்பழ லேகியம் 1161.

அசாத்திய குஷ்டத்துக்கு :—

இரண்டாம் பாகம்

கருவங்கச்செந்தூரம் வறுப்பு 160.

அசீரணக் கழிச்சலுக்கு :—

ஒன்பதாம் பாகம்

பேதிகட்டக் கஷாயம் 1390. உஷ்ணவாயு அடை கஷாயம் 1406.

அசீரணக் சுர ரோகத்திற்கு :—

ஐந்தாம் பாகம்

சந்திரபாதரசம் 657. சந்திராமிர்தரசம் 658.

எட்டாம் பாகம்

இஞ்சிலேகியம் 1094.

அசீரணத்துக்கு :—

முதற் பாகம்

தேவகிருபாவுசிதம் 2, ஷிவேறு 3, உலோக செந்தூரம் 10, சாரலோகசெந்தூரம் 13, அயப்பொடிலேகியம் 24, மண்டூரப்பாவனே 28, உலோகமாரண காந்தசெந்தூரம் 48, எ்ஃகுகாந்த செந்தூரம் 56, சுயமக்கினி செந்தூரம் 57, தாம்பிரபற்பம் 75, மேற்படி வேறு 77, மேற்படி வேறு 83, மேற்படி வேறு 89, மேற்படி வேறு 91.

இரண்டாம் பாகம்

அப்பிரகபற்பம் 103, மேற்படி வேறு 105, அப்பிரகச் சுண்ணம் 117, கருவங்க பற்பம் 141, கருவங்க செந்தூரம் 161, வெள்ளி செந்தூரம் 200, மேற்படி வேறு 201

மூன்ரும் பாகம்

பலகறைப்பற்பம் 159, பஞ்சலவணபற்பம் 185. கறியுப்புச் சுண்ணம் 187. கறியுப்பு செந்தூரம் 188. ஆறுப்பு ஜெயநீர் 204, மகாதிராவகம் 205. இலவணதிராவகம் 207. கறியுப்பு மெழுகு 211. கறிபுப்புபற்பம் 212. பூநீற்றுச் சுண்ணம் 213. மேற்படி வேறு 214. சவுக்காரச் சுண்ணம் 215. நவச்சாரக்கட்டு 224. மேற்படி வேறு 225. நவச்சார செந்தூரம் 233. வெடியுப்பாதிக்கிருதம் 252, ஆமையோட்டுப்பற்பம் 405.

நான்காம் பாகம்

சம்பீர இலிங்க மெழுகு 485. இலிங்க செந்தூரம் 491. மேற்படி வேறு 492. மேற்படி வேறு 504. ஜீவாக்கினி இலிங்க செந்தூரம் 511. சொர்ண இலிங்க செந்தூரம் 512. இலிங்க பற்பம் 524. மார்த் தாண்டபைரவம் 539.

ஐந்தாம் பாகம்

சதாசாகர ரசம் 626 அக்கினிகுமார ரசம் 640. மகாதாராச ரசம் 642. சுந்தர அக்கினிகுமார ரசம் 649. சந்திரபரத ரசம் 657. காச அக்கினி ரசம் 659. காமகளா ரசம் 662. இரசபற்பம் 674, குருரசச் செந்தூரம் 719. சொர சிந்தம் 732.

ஆரும்பாகம்

கெந்தகபற்பம் 763, கெந்தகச்சுண்ணம் 780, கெந்தக எண்ணெய் 818.

அசீரணத்துக்கு :—

ஏழாம் பாகம்

காளகண்டமேக நாரயணசெந்தூரம் 1002, மேற்படி வேறு 1003, இலகுசுயமக்கினி செந்தூரம் 1013.

எட்டாம் பாகம்

நாகராதியுண்டை 1036, பஞ்சதீபாக்கினி லேகியம் 1037, கறியாதி தீபனச்சூரணம் 1049, கறியாதிமதனகாமேசுரம் 1051, அனூஷ்தவா 1063, சீரகப்பாவனை 1060, பெருங்காயலேகியம் 1157, சதாபல லேகியம் 1162, விளாம்பழத்திராவகம் 1165, விளாம்பழஷர்பத் 1166, கருவேப்பிலைச் சூரணம் 1182, தாளிசப்பத்திரி வடகம் 1207.

ஒன்பதாம் பாகம்

சிவதைச்சூரணம் 1211, பேதி பச்சையெண்ணெய் 1245, மேகபேதியெண்ணெய் 1252, மேகனுதிக் குளிகை 1271, சூடாமணி மாத்திரை 1272, கிராமணி சூக்ஷுமசூரணம் 1378, கிரஹணி திலதாதிச்சூரணம் 1379, கபாடச்சிந்தாமணி 1382, ஓமஉருண்டை 1393, உஷ்ணபேதிக் கருக்குச்சூரணம் 1408, உஷ்ணவாயு உண்டை 1409, உஷ்ணவாயு காயலேகியம் 1410, சூதகவாயு எள்ளுலேகியம் 1411.

பத்தாம் பாகம்

அஷ்டகுன்ம உண்டை 1462, குன்மஉசிதம் 1464,

அசீரணபேதிக்கு :—

முதற் பாகம்

சுயமக்கினி செந்தூரம் 57, பஞ்சாக்கினி செந்தூரம் 62.

மூன்றும் பாகம்

விஷபேதி திராவகம் 208.

ஏழாம் பாகம்

சண்டமாருதக்குழம்பு 976.

எட்டாம் பாகம்

கறியாதி தீபனச்சூரணம் 1049, மிளகுலேகியம் 1050 கறியாதி மதனகாமேசுரம் 1051, சுக்குலேகியம் 1156, எலும்பிச்சம்பழ லேகியம் 1161, கருவேப்பிலைக்கருக்குக் கஷாயம் 1183.

ஒன்பதாம்பாகம்

அபின் மாத்திரை 1275, பேதிகட்டக்கஷாயம் 1391 மேற்படி வேறு 1392 சோம்புத்தைல உசிதம், 1398 விஷபேதிக் களங்கம் 1399.

அசீரணமேகத்துக்கு :—

எட்டாம்பாகம்

திரிபலாதிச்சூரணம் 1060.

அசீரண வயிற்று நோவுக்கு :—

மூன்றுமபாகம்

ஆறுப்பு ஜெயநீர் 204.

அசீரண வாயுவுக்கு :—

எட்டாம் பாகம்

சீரகாதி லேகியம் 1070.

அசுகுனி ரோகத்துக்கு :—(காதுக்கரப்பான்)

ஐந்தாம் பாகம்

காளகண்ட மேக நாராயண செந்தூரம் 710. மேற்படி வேறு 714.

அசைந்த பல் இறுக :—(பல்லசைவுக்கு என்பதைப் பார்க்க).

பத்தாம் பாகம்

தந்தரோக உசிதம் 1676.

அடங்கா பசியுண்டாக :—(பசிதீபனமுண்டாகஎன்பதைப் பார்க்க)

ஏழாம் பாகம்

பாஷாண பற்பம் 894. மேற்படி வேறு 900.

எட்டாம் பாகம்

பொதினு ஷர்பத் 1171.

அடங்கா வீரியமுண்டாக :—(வீரியமுண்டாக என்பதையும் பார்க்க)

மூன்றும் பாகம்

பூநாகப்பிரயோகம் 407.

அடி காயத்துக்கு :—

பத்தாம் பாகம்

புண்பச்சையெண்ணெய் 1531.

அடிக்கடியுண்டாகும் ஜலதோஷத்துக்கு :—

நான்காம் பாகம்

இலிங்க செந்தூரம் 507.

அடிப்பட்டு நொந்த சதையில் நோவு நீர :—

ஐந்தாம் பாகம்

சர்வரோக ஹரசண்ட மாருத செந்தூரம் 712.

அடிமூலத்துக்கு :—

நான்காம் பாகம்

இலிங்காதி பதங்கம் 534.

அடிவயிற்றிரைச்சலுக்கு :—

முதற் பாகம்

மண்டூர செந்தூரம் 31

அடிவயிற்றில் ரணங்கண்டு அதிக நீரேற்றங்கொண்டு பசி தாக மின்றி வெள்ளைப் பூண்டின் வாசனையுடைய ஏப்பத்தை யுண்டாக்குதல் என்னும் குணத்தையுடைய சேத்தும வகை ரணத்துக்கு :—

மூன்றும் பாகம்

முத்துப் பற்பம் 441.

அழுகிரந்திக்கு :—(கிரந்திக்கு என்பதையும் பார்க்க)

ஏழாம் பாகம்

மகாவானமா மெழுகு 991.

அடுத்தடுத்து வரும் சுரங்களுக்கு :—

எட்டாம் பாகம்

அசுவகெந்திச் சூரணம் 1114. மேற்படி வேறு 1115. அசுவ கெந்திர ரசாயனம் 1117.

அஷ்ட குன்மத்துக்கு :—

முதற்பாகம்

காந்தாதிச் சூரணம் 49. மகாசுயமக்கினி செந்தூரம் 60. அயவீர செந்தூரம் 69. மேற்படி வேறு 70. மேற்படி வேறு 71. மேற்படி வேறு 72, தாம்பிரபற்பம் 78. தாம்பிரக்குரு ஜெயநீர் பக்கம் நம்பர் 218.

இரண்டாம்பாகம்

நாகபற்பம் 171.

மூன்ரும்பாகம்

போஜன சஞ்சீவி 183.

நான்காம்பாகம்

சண்டரச பற்பம் 535, வீரபற்பம் 613.

ஐந்தாம்பாகம்

இரசபதங்கம் 679, ஈசுரசிந்தாமணி ரச செந்தூரம் 706, காள கண்டமேக நாராயண செந்தூரம் 710 மேற்படி வேறு 714.

ஏழாம்பாகம்

பஞ்சபூத செந்தூரம் 951. அயவீர செந்தூரம் 953. விஷாமிர் தமை 969 அக்கினி குமார செந்தூரம் 1000. சர்பராஜ மாத்திரை 1034.

எட்டாம்பாகம்

மகாவில்வாதி லேகியம் 1143.

ஒன்பதாம்பாகம்

குன்மபேதி மெழுகு 1255.

பத்தாம்பாகம்

கௌசைப் பேய்ப்பீர்க்கு லேகியம் 1454. அஷ்டகுன்ம உண்டை 1462. அஷ்டகுன்ம கிட்டக்குளிகை 1471. தேங்காய்ச் சூரணம் 1472.

அஷ்ட பாண்டுவுக்கு :—

முதற்பாகம்

அயக்காந்த பற்பம் 54, அஷ்டபாண்டு விநோத மெழுகு 67.

ஒன்பதாம்பாகம்

பேதிக்கருப்பு மெழுகு 1254.

அஷ்டபீலீகைகளுக்கு :—

முதற் பாகம்

மகாசுயமக்கினி செந்தூரம் 60.

அஷ்டலட்சுமி விலாசமுண்டாக :—

ஐந்தாம் பாகம்

சர்வரோக ஹாதன செந்தூரம் 723.

அட்டைக் கடிக்கு :—

ஐந்தாம் பாகம்

உத்தரரச செந்தூரம் 707.

அண்ட இசிவுக்கு :—

பத்தாம்பாகம்

வச்சிர சிந்தாமணி உண்டை 1479, அண்டவாயு உசிதம் 1480.

அண்டக் கடுப்புக்கு :—

பத்தாம் பாகம்

அண்டவாயு உசிதம் 1480.

அண்டக் குத்துக்கு :—

பத்தாம் பாகம்

அண்டவாத எண்ணெய் 1488

அண்டசந்து வாதத்துக்கு :—

ஐந்தாம் பாகம்

மன்மத சிந்தாமணி ரசசெந்தூரம் 708.

அண்ட சம்பந்தமாயுண்டாகும் சுரத்துக்கு :—

ஐந்தாம் பாகம்

இரசபற்பம் 670.

ஏழாம் பாகம்

பாஷாணக்கட்டு 839. மேற்படி வேறு 890. மேற்படி வேறு 891. மேற்படி வேறு 892. மேற்படி வேறு 893. மகாவானமா மெழுகு 991.

பத்தாம் பாகம்

வச்சிர சிந்தாமணி உண்டை 1479.

அண்ட சூலைக்கு:—

நான்காம் பாகம்

அவ்வைலிங்க மெழுகு 487.

ஐந்தாம் பாகம்

குருபற்பம் 689.

ஆரும் பாகம்

கெந்தக மெழுகு 786.

அண்டத்திற் புண்ணுக்கு:—

ஆரும் பாகம்

கெந்தகத் தைலம் 811.

அண்டப்பவுத்திரத்துக்கு:—

ஐந்தாம் பாகம்

மன்மத சிந்தாமணி ரசசெந்தூரம் 708.

அண்டப்பிளவைக்கு:—

ஐந்தாம் பாகம்

மன்மத சிந்தாமணி ரசசெந்தூரம் 708.

அண்டப்புற்றுக்கு:—

ஐந்தாம் பாகம்

மன்மதசிந்தாமணி ரசசெந்தூரம் 708.

ஏழாம் பாகம்

புஜண்டர் ராமபாண மாத்திரை 977.

அண்ட வாதத்துக்கு:—

முதற் பாகம்

தாம்பிர பற்பம் 84.

இரண்டாம் பாகம்

நாக பற்பம் 171.

மூன்ரும் பாகம்

முத்துப் பற்பம் 441.

நான்காம் பாகம்

அவ்வைலிங்க மெழுகு 487. இலிங்காதி உபசண்டமாருத செந்தூரம் 514. தீர் அந்தாஸ்கான் மாத்திரை 568. சண்டமாருத செந்தூரம் 580.

ஐந்தாம் பாகம்

இரசபற்பம் 670, இரசப் பதங்கம் 679, சண்டரச சுண்ணம் 688, மன்மத சிந்தாமணி ரச செந்தூரம் 708, கௌரி சிந்தாமணி, இரணமுகதீர ரசசெந்தூரம் 709, வித்து ரசமெழுகு 740.

ஆரும் பாகம்

கெந்தக மெழுகு 786. மேற்படி வேறு 791. கெந்தக ரசாயனம் 799. மேற்படி வேறு 800.

ஏழாம் பாகம்

பஞ்ச பாஷாண செந்தூரம் 925. இரசமெழுகு 970. நவரச மெழுகு 971· மகாவானமா மெழுகு 991.

எட்டாம் பாகம்

இலிங்க செந்தூரம் 1089. இராஜவல்லாதி 1154. இராஜபதங்கம் பக்கம் நம்பர் 154.

ஒன்பதாம் பாகம்

இலகு அயாரிஷ் மாத்திரை 1232.

பத்தாம் பாகம்

அண்டவாயுஉசிதம் 1480. அண்டவாத ஒற்றிடம் 1482. வாயுமேற்பூச்சுத் தைலம் 1485. அண்டவாத கோழிச்சூரணம் 1486. விரைவாத லேகியம் 1487. அண்டவாத எண்ணெய் 1488. மேற்படி வேறு 1489 அண்டவாத மேற்பூச்சுத் தைலம் 1402. அண்டவாத அழிஞ்சில் எண்ணெய் 1493. குடோரித் தைலல் 1556.

அண்டவாயுவுக்கு :—

முதற் பாகம்

அயவீரசெந்தூரம் 69. மேற்படி வேறு 70. தாம்பிரபற்பம் 90.

இரண்டாம் பாகம்

கருவங்க சூதபற்பம் 154, நாகபற்பம் 171.

COMPLIMENTARY

மூன்றும் பாகம்

அண்டச்சுண்ணம் 390. அண்டபற்பம் 391. அண்டமெழுகு 399.

நான்காம் பாகம்

வாயுராஜ இலிங்கமெழுகு 484. இலிங்க செந்தூரம் 491. சண்டரசபற்பம் 535.

ஐந்தாம் பாகம்

காளகண்டமேக நாராயணசெந்தூரம் 710. மேற்படி வேறு 714. இரசமெழுகு 738

ஏழாம் பாகம்

பஞ்சபூதசெந்தூரம் 951. பஞ்சபூதப்பதங்கம் 962. நவரச மெழுகு 971. மகாவானமா மெழுகு 991.

எட்டாம் பாகம்

ராமபாண வல்லாதி 1153.

ஒன்பதாம் பாகம்

முஞ்சிஷ் பேதி மாத்திரை 1321. இலகு அயாரிஷ் மாத்திரை 1232. விநோத பேதி மாத்திரை 1233.

பத்தாம் பாகம்

சிந்தாமணியெண்ணெய் 1458. மலட்டெண்ணெய் 1475. வச்சிர சிந்தாமணி உண்டை 1479. அண்டவாதக் கட்டு 1483. சகல வாயு ஒற்றிடம் 1484. அண்ட எண்ணெய் 1490. அண்ட வாதபேதி 1491.

அண்டவீக்க சம்பந்தமான நோவு இசிவு, கடுப்பு ஆகியவற்றிற்கு:—

பத்தாம் பாகம்

அண்டவாதக்கட்டு 1483.

அண்ட வீக்கத்துக்கு:—

முதற் பாகம்

தாம்பிர பற்பம் 84.

இரண்டாம் பாகம்

கருவங்க சூதபற்பம் 154.

மூன்றும் பாகம்

அண்டச் சுண்ணம் 390.

ஐந்தாம் பாகம்

இரசபற்பம் 670.

ஏழாம் பாகம்

மகாவானமா மெழுகு 991.

ஒன்பதாம் பாகம்

இலகு அயாரிஜ்மாத்திரை 1232, விநோதபேதி மாத்திரை 1233

பத்தாம் பாகம்

வச்சிரசிந்தாமணி உண்டை 1479. அண்ட வாயு உசிதம் 1480, அண்டவாத ஒற்றடம் 1482. அண்டவாதக்கட்டு 1483. வாயு மேற்பூச்சுத் தைலம் *1485*.

அண்ட வேதனைக்கு :—

மூன்றும் பாகம்

அண்டச்சுண்ணம். 390.

அதிக இந்திரிய விருத்தியுண்டாக :—

ஐந்தாம் பாகம்

சரபஞ்ச ரசசெந்தூரம் 711.

அதிக நாட்பட்ட பிரமேகத்துக்கு :—

ஒன்பதாம் பாகம்

பிரமேக உசிதம் 1288.

அதிக பலமுண்டாக :—

ஐந்தாம் பாகம்

சரபஞ்ச ரசசெந்தூரம் 711

அதிகமாக இறங்குகிற நீர் அதிசீக்கிரம் குறைந்துபோக :—

ஒன்பதாம் பாகம்

நீரிழிவு உசிதம் 1349

அதிகமாகப் பருத்திருக்கிற தேகம் இறுகிப் பலப்பட்டுச் சிறுக்க—:

ஏழாம் பாகம்

சஞ்சீவி மாத்திரை 1035.

அதிகவேகமான சுரத்துக்கு :—

மூன்ரும் பாகம்

கல்மத பற்பம் 148.

அதிகள்ளிகா ரோகத்திற்கு (கள்ளிபூக் கிரந்தி) :—

மூன்ரும் பாகம்.

மஞேசிலை செந்தூரம் 261.

அதிசாரத்துக்கு :—

முதற் பாகம்

இலிங்கக் கருப்பு–பக்க நம்பர்–13, உலோகசெந்தூரம் 11, சாரலோகசெந்தூரம் 13, தண்டவாளச்செந்தூரம் 42.

இரண்டாம் பாகம்

அப்பிரேக பற்பம் 104, கருவங்கபற்பம்-141, தங்கபற்பம் 202, பொன்னிமிளைச் செந்தூரம் 219.

மூன்ரும் பாகம்

துருசுசெந்தூரம்–386, பேதிவீர செந்தூரம்–388, ஆமை யோட்டுப் பற்பம்–404, மேற்படி வேறு-405, முத்துப்பற்பம்–441, மரகதபற்பம் 463, நீலபற்பம்–465, மேற்படி வேறு 466.

ஐந்தாம் பாகம்

அமிர்த ரசம்–631, ஆனந்தபைரவ ரசம்-635, குருரச செந்தூரம் 719.

ஆரும் பாகம்

தாளக செந்தூரம் 852

ஏழாம் பாகம்

சண்டமாருதக் குழம்பு 976, மகாவானமாமெழுகு 991.

எட்டாம் பாகம்

நாகராதிக்கிருதம் 1045, நாகராதி மதனகாமேசுரலேகியம் 1046 நெல்லிமுள்ளிலேகியம் 1062, ஏலாதிச் சூரணம் 1077, சுக்கு லேகியம் 1155, விளாம்பழ ஷர்பத் 1167.

ஒன்பதாம் பாகம்

கிரஹணி அண்டச்சூரணம் 1377. புளியாரை நெய் 1386, கிராணி செந்திப்பக்குவம் 1383.

அதிகார பேதிக்கு :—

இரண்டாம் பாகம்

தங்கபற்பம் 203.

நான்காம் பாகம்

சண்டமாருத செந்தூரம் 580.

ஐந்தாம் பாகம்

காரரச செந்தூரம் 729.

எட்டாம் பாகம்

நாகராதிக்கிருதம் 1044. தான்றிக்காய் லேகியம் 1067.

அதிசார வகைகளுக்கு :—

எட்டாம் பாகம்

சீரகாதி லேகியம் 1070.

ஒன்பதாம் பாகம்

கபாடச் சிந்தாமணி 1382.

அதிகார ரோகத்துக்கு :—

நான்காம் பாகம்

ஜம்பீர இலிங்கமெழுகு 485.

எட்டாம் பாகம்

விளாம்பழப் பானம் 1164. விளாம்பழத் திராவகம் 1165. விளாம்பழஷர்பத் 1166. மல்லியாதிச் சூரணம் 1074. ஏலாதிச் சூரணம் 1077. மகாவில்வாதி லேகியம் 1143. இஞ்சிபானம் 1174.

ஒன்பதாம் பாகம்

மேகக்குடிநீர் 1284. கிராந்தியுசிதம் 1357. பூசணிக்காய்க் கிருதம் 1361.

அதிபித்த வறட்சிக்கு :—

ஒன்பதாம் பாகம்

மேகக்குடிநீர் 1284.

அதிமூத்திர ரோகத்துக்கு :—

முதற் பாகம்

இலிங்கக் கருப்பு-பக்கம். நம்பர் 13.

இரண்டாம் பாகம்

அப்பிரக பற்பம் 109. மேற்படி வேறு 112. வெள்ளி செந்தூரம் 198, மேற்படி வேறு 199.

ஏழாம் பாகம்

மகாவாணமா மெழுகு 199.

ஒன்பதாம் பாகம்

மகாகோடாசுழி 1231. மதுமேகச் சூரணம் 1358. மதுமேகப் பட்டைச் சூரணம் 1359.

அதிவேர்வை ரோகத்துக்கு :—

முதற் பாகம்

ஆறுமுக செந்தூரம் 63. மேற்படி வேறு 64.

ஏழாம் பாகம்

கௌரி சிந்தாமணி ரசசெந்தூரம் 1012.

அதைப்புக்கு—(வீக்கம்)

முதற் பாகம்

உலோக மண்டூரவட்டு 36

அத்திக்காய்க் கிரந்திக்கு :—

எட்டாம் பாகம்

நீரடிமுத்துவல்லாதி 1150.

அஸ்திக் குடைச்சலுக்கு :—

ஐந்தாம் பாகம்

வித்துரசமெழுகு 740,

ஏழாம் பாகம்

கோரோசனைமெழுகு 965.

அஸ்திக்குள்ளிருக்கும் நோவுக்கு :—

எட்டாம் பாகம்

இராஜவல்லாதி 1154, இராஜபதங்கம் பக்கம் நம்பர் 154.

அஸ்தி சுரத்துக்கு :—

இரண்டாம் பாகம்

அப்பிரேகபற்பம் 103. ஜவாஹிர்மோரு அல்லது இரத்தின சொர்னமாலியம் 107. அப்பிரேகபற்பம் 111. வெள்ளிபற்பம் பக்க நம்பர் 163. வீரிய வெள்ளிபற்பம் 192. வெள்ளி செந்தூரம் 198. மேற்படி வேறு 199. தங்கபற்பம் 204. சிலாசத்துபற்பம் 231.

மூன்றும் பாகம்

சிங்கிபற்பம் 153. சங்குபற்பம் 156. மேற்படி வேறு 157. பலகறைப்பற்பம் 161. பவளபற்பம் 430. முத்துப்பற்பம் 448. வயிர பற்பம் 451. நவரத்தினபற்பப் பொதுமுறை 471.

நான்காம் பாகம்

பூரக்கட்டு 550.

ஐந்தாம் பாகம்

மன்மதசிந்தாமணி ரசசெந்தூரம் 708.

எட்டாம் பாகம்

சுவாச உண்டை 1042. திப்பிலியாதிக் கிருதம் 1053. யானைத் திப்பிலிக்கிருதம் 1054. திரிபலாதிச் சூரணம் 1060. நெல்லிமுள்ளி லேகியம் 1062. நெல்லிக்காய் லேகியம் 1065. சீரகாதிலேகியம் 1070. சீரகாதி நெய் 1072. தாளிசச்சூரணம் 1078. தாளிசப்பத்திரிச் சூரணம் 1079. தாளிசலேகியம் 1030: அசுவகெந்திரசாயனம் 1117. அசுவகெந்திநெய் 1119. மேற்படி வேறு 1120. அஷ்டச்சூரணம் பக்கம் நெம்பர் 100. மகாவில்வாதி லேகியம் 1143.

ஒன்பதாம் பாகம்

சூடாமணி மாத்திரை 1272.

அஸ்திச்சூடு முதலிய உஷ்ண ரோகங்களினுல் தேகம் இளைத்துப் போதல் தீர்ந்து தேகம் ஸ்தூலிக்க :—

மூன்றும் பாகம்

முத்துப்பற்பம் 442.

அஸ்திச் சூட்டுக்கு :—

முதற் பாகம்

பவளக் கருப்பு :—பக்க நம்பர் 16.

இரண்டாம் பாகம்

வெள்ளிபற்பம் 188. மேற்படி வேறு 190. மேற்படி வேறு 192. வெள்ளிசூதபற்பம் 195. சிலாசத்துபற்பம் 231.

மூன்றும் பாகம்

கல்நார்பற்பம் 145, மேற்படி வேறு 146. மேற்படி வேறு 147. கல்மதபற்பம் 150. சிங்கிபற்பம் 154. அன்னபவள செந்தூரம் 389. பவளபற்பம் 429. மேற்படி வேறு 430. மேற்படி வேறு 431. முத்துப் பற்பம் 418. மேற்படி வேறு 449. முத்துச் சுண்ணம் 450.

ஏழாம் பாகம்

நவரசமெழுகு 971. பால்பற்பம் 997.

எட்டாம் பாகம்

திரிபலாதிச் சூரணம் 1060. பாவன நெல்லிக்காய் 1066. சரீர போஷணம் 1113.

ஒன்பதாம் பாகம்

வீரியபந்தப் பிரயோகம் 1306. நெய்தல் நெய் 1325. மகாமேகக் கிருதம் 1328. சந்தன எண்ணெய் 1333. மேற்படி வேறு 1334. வித்தாதிச் சூரணம் 1336. திந்திருணியுசிதம் 1347. கதலிக் கிருதம் 1363. இளநீர் உசிதம 1365.

பத்தாம் பாகம்

இரத்தக்ஷயஉசிதம் 1634. மேற்படி வேறு 1635.

அத்திப்ப யோதரச்சிலந்திக்கு :—(ஸ்தனத்திலுண்டாகும் **சிலந்தி**)

மூன்றும் பாகம்

முத்துப்பற்பம் 441.

அஸ்தியைப் பற்றின ரோகங்களுக்கு :—

எட்டாம் பாகம்

திப்பிலியாதிக் கிருதம் 1053.

அஸ்திவெட்டைக்கு :—

முதற் பாகம்

பவளக்கருப்பு—பக்க நம்பர்-16.

மூன்றும் பாகம்

கல்நார் பற்பம் 145, முத்துப் பற்பம் 449.

எட்டாம் பாகம்

வெள்ளுள்ளி நெய் 1090. சரீரபோஷணம் 1113. அசுவகெந்தி ரசாயனம் 1117. அசுவகெந்தி நெய் 1118.

ஒன்பதாம் பாகம்

சந்தன எண்ணெய் 1333. மேற்படி வேறு 1334. கதலிக் கிருதம் 1363.

அஸ்மரி ரோகத்துக்கு :—

இரண்டாம் பாகம்

சுத்தி செய்த சிலாசத்து பக்க நம்பர் 248. யூதக்கல் பற்பம் 240. மேற்படி வேறு பக்க நம்பர் 259. மேற்படி வேறு 241. மேற்படி வேறு 242. மேற்படி வேறு 243. மேற்படி வேறு 244.

அநேக சண்டிநோய்களுக்கு :—

நான்காம் பாகம்

சண்டரச பற்பம் 535.

அந்தக சன்னிக்கு :—

ஏழாம் பாகம்

மகாவானமாமெழுகு 991.

அந்தரவாயுவுக்கு :—

ஐந்தாம் பாகம்

இரச பற்பம் 670. சண்டரச சுண்ணம் 688.

ஆறும் பாகம்

கெந்தக மெழுகு 786, கெந்தக ரசாயனம் 799.

அந்திமாலைக்கு :—(மாலைக்கண்)

பத்தாம் பாகம்

அந்திமாலை உசிதம் 1682. நயனரோக சந்திரோதயம் 1708. நயனரோக தாம்பிரமணி மாத்திரை 1714. நயன சஞ்சீவிமை 1726. கண் நவநீத மை 1727.

அந்திரவாயுவுக்கு :—

பத்தாம் பாகம்

அண்டவாத எண்ணெய் 1489.

அபத்தய முதலியவைகளினுல் நேரிட்ட தோஷங்களுக்கு :—

மூன்றும் பாகம்

வைடூரிய பற்பம்-470.

ஏழாம் பாகம்

மகாவானமாமெழுகு-991.

அபஸ்மாரரோகத்துக்கு :—

ஆரும் பாகம்

சீதாம்சரசம்-871.

அபனியாச சன்னிக்கு :—

ஏழாம் பாகம்

மகாவானமாமெழுகு-991.

அபாயகரமான அநேக வாயுக்களுக்கு:—

நான்காம் பாகம்

ருத்திரவாயு இலிங்கமாத்திரை 537.

அபனவாயுவால் வாயு வெளிப்பட :—

நான்காம் பாகம்

வாயுராஜ இலிங்கமெழுகு 484

எட்டாம் பாகம்

இலிங்க செந்தூரம் 1089.

அம்மைஇரணம் ஆறித் தழும்புகள் மறைய :—

முதற் பாகம்

தாம்பிரசெந்தூரம் 94

அரிகரப்பானுக்கு :—

ஏழாம் பாகம்

பஞ்சபாஷாணசெந்தூரம் 925.

அரிகிரந்திக்கு :—

ஆரும் பாகம்

கெந்தகரசாயனம் 799, மேற்படி வேறு 800.

ஏழாம் பாகம்

மகாவானமா மெழுகு 991.

எட்டாம் பாகம்

நீரடிமுத்துவல்லாதி 1150.

ஒன்பதாம் பாகம்

அமுதாதிவல்லாதி 1364.

பத்தாம் பாகம்

கிரந்தியுண்டை 1514.

அரிகுரலுக்கு :—

ஐந்தாம் பாகம்

சர்வரோகஹரசண்டமாருதசெந்தூரம் 712.

அரிப்பு முதலியவைகளுக்கு :—

இரண்டாம் பாகம்

பொன்னிமிளைசெந்தூரம் 221.

அருசிக்கு :—

முதற் பாகம்

சுயமக்கினிசெந்தூரம் 58.

அருவருப்புக்கு :—

இரண்டாம் பாகம்

அப்பிரக பற்பம்–105

அரைச்சோறுபட்டுக் கழிதலுக்கு :—

முதற் பாகம்

உலோகசெந்தூரம் 10.

எட்டாம் பாகம்

நாகராதி யுண்டை 1036.

அரைப்பிணமாகி மாறுவஸ்தையிலிருப்பவர்கள் ஒரு மணி நேரத்திற்குள் சுபாவ ஸ்திதியையடைந்து சுபாவமாய்ப் பேசும்படியான சக்தியுண்டாக:—

மூன்றும் பாகம்

வயிரபற்பம் 454, மேற்படி வேறு 455.

அரைப் புண்களுக்கு:—

ஆறும் பாகம்

கெந்தக எண்ணெய் 813.

அரையாப்புக்கு :—

நான்காம் பாகம்

கனக இலிங்கமெழுகு 483, தன்வந்திரி செந்தூரம் 513, வஜ்ஜிரகண்டி மாத்திரை 540, இலிங்கப்புகை 544, இரசகற்பூர மெழுகு 556, கோரோசனைமெழுகு 557, வீரப்புகை 619.

ஐந்தாம் பாகம்

காய்ரசப் பதங்கம் 683, குருபற்பம் 689, கௌரிசிந்தாமணி இரணமுகவீரரச செந்தூரம் 709, காளகண்ட மேகநாராயண செந்தூரம் 710. மேற்படி வேறு 714, வித்து ரசமெழுகு 740, இரத்நாகர ரசமெழுகு 744.

ஆறும் பாகம்

கெந்தக ரசாயனம் 799, கெந்தகக் குழித்தைலம் 806, மேற்படி வேறு 807, கெந்தகத் தைலம் 811, கெந்தகச் சுடர்த் தைலம் 812.

ஏழாம் பாகம்

பஞ்ச பாஷாண செந்தூரம் 925, பஞ்சபூதப் பதங்கம் 962, நவரசமெழுகு 971, ஜாதிலிங்கப்புகை 984, மேற்படி வேறு 985, மேற்படி வேறு 986, அக்கினி குமாரசெந்தூரம் 1000, இலிங்கப் பதங்கம் 1025, சரப இராஜமாத்திரை 1034.

எட்டாம் பாகம்

குக்கிலாதிச் சூரணம் 1107, பறங்கிப்பட்டைப் பதங்கம் 1128, வல்லாதகி லேகியம் 1146, பால்வல்லாதி 1148, இடிவல்லாதி 1149, நீரடிமுத்து வல்லாதி 1150, இலகுவல்லாதி 1151, பறங்கிப்பட்டை லேகியம் 1158, அசுவ கெந்திப்பற்று 1180, மைசாக்ஷி பில்லை 1181, தேங்காய் நெய் 1189

ஒன்பதாம் பாகம்

அரையாப் பெண்ணெய் 1250, வச்சிரகண்டி மாத்திரை 1270, வல்லாதகி நெய் 1326, மேகாதியெண்ணெய் 1332.

பத்தாம் பாகம்

சிந்தாமணியெண்ணெய் 1458, ஆனைக்கால் பற்று 1494, மெற்படி வேறு 1495, மேற்படி வேறு 1496, அரையாப்புப்பற்று 1502, மேற்படி வேறு 1503, மேற்படி வேறு 1504, அரையாப்புக் கட்டு 1505, அரையாப்புசிதம் 1506, அரையாப்புக்கட்டு 1507, அரையாப்பு லேகியம் 1509, அரையாப்பெண்ணெய் 1511, கிரந்தி யுண்டை 1514, புற்றுப் பதங்கம் 1515, இரணப்பூச்சுத் தைலம் 1524, புண்சுடர்த்தைலம் 1527, கண்டமாலைப் பற்று 1551, குடோரித் தைலம் 1556.

அரையாப்புப் புண்ணுக்கு :—

ஒன்பதாம் பாகம்

அரையாப்புக் களிம்பு 1508.

அரையில் ரணங்கண்டு அது வெடித்துச் சீலைநீரும் இரத்தமும் சதா வடிந்து அன்னத்து வேஷமாயிருத்தல் என்னும் குணத்தை யுடைய பித்ததாகை ரணத்துக்கு:—

மூன்றும் பாகம்

முத்துப்பற்பம் 441.

அரோசிகத்துக்கு :—

முதற் பாகம்

அயப்பொடி லேகியம் 24, அறுமுகஜம்பீர கற்பம் பக்கநம்பர் 150, அறுமுகவடகம் 66, தாம்பிரபற்பம் 76.

இரண்டாம் பாகம்

அப்பிரேகபற்பம் 103, வங்கதங்கபற்பம் 178, பொன்னிமிளை பற்பம் 217. மேற்படி வேறு 218.

மூன்றும் பாகம்

மரகதபற்பம் 463, மேற்படி மேறு 464.

ஐந்தாம் பாகம்

ஹேமகிருபாரசம் 664, காளகண்டமேகநாராயண செந்தூரம் 710, சரபஞ்சரச செந்துரம் 714, காளகண்டமேகநாராயண செந்தூரம் 714.

எட்டாம் பாகம்

சுவாச உண்டை 1042, திப்பிலியாதிக்கிருதம் 1053, யானைத் திப்பிலிக்கிருதம் 1054. நெல்லி முள்ளிலேகியம் 1062, அனூஷ்தவா. 1063, ஆமிலகலேகியம் 1064 சீரகாதிலேகியம் 1070, மல்லியாதிச் சூரணம் 1074 ஏலாதிச்சூரணம் 1075, ஏலாதிலேகியம் 1076, அசுவ கெந்தி நெய் 1120, அஷ்டச் சூரணம் பக்கநம்பர் 100. திராக்ஷாதிச் சூரணம் 1134. சிறுவில்வாதிலேகியம் 1142, மகாவில்வாதிலேகியம் 1163, விளாம்பழ ஷர்பத்து *1167*, துருஞ்சிநாரத்தம்பழ ஷர்பத் *1169*, ரோஜாப்பு ஷர்பத் *1176*.

ஒன்பதாம் பாகம்

செம்பரத்தம்பூ ஷர்பத் 1322.

அர்த்தாங்கவாயுவுக்கு :—

ஏழாம் பாகம்

பாஷாணபற்பம் 908.

அலசகுஷ்டத்துக்கு :—

ஏழாம் பாகம்

மகாவானமா மெழுகு 991.

அலிமுகப்பாண்டில் வருகிற சுரத்துக்கு :—

இரண்டாம் பாகம்

வெள்வங்கபற்பம் 131.

அலிமுகப்பாண்டு ரோகத்து :—

இரண்டாம் பாகம்

அப்பிரகசத்துப்பற்பம் *108*, வெள்வங்கபற்பம் 131.

நான்காம் பாகம்

இலிங்கசெந்தூரம் 492.

அவயவங்களின் சோர்வுக்கு :—

எட்டாம் பாகம்

ஊர்க்குருவிலேகியம் *1206*.

அவுதும்பரகுஷ்டத்துக்கு :—

ஏழாம் பாகம்

மகாவானமாமெழுகு 991.

அழுகுகாமாலைக்கு :—

இரண்டாம் பாகம்

வெள்ளிச் செந்தூரம் *198*, மேற்படி வேறு *199*.

எட்டாம் நம்பர் எட்டாம் பாகம்

மன்மதகாமினி புஷ்டிலேகியம் 1082. சரீரபோஷ்ணம் *1116*.

அழலைக்கு :—

ஐந்தாம் பாகம்

பாலசொரசிந்தம் 733.

எட்டாம் பாகம்

யானைத்திப்பிலிக் கிருதம் 1054.

ஒன்பதாம் பாகம்

வெள்ளைத் தைலம் 1339.

அழல் மாந்தத்துக்கு :—

ஐந்தாம் பாகம்

பாலசொரசிந்தம் 733.

அழற் காமாலைக்கு :—

பத்தாம் பாகம்

காமாலைப்பழ லேகியம் 1434.

அழிசிரங்கிற்கு :—

பத்தாம் பாகம்

பொத்திகடித் தைலம் 1569.

அழிபுண்ணுக்கு :—

ஐந்தாம் பாகம்

வீரரச செந்தூரம் 694.

ஆரும் பாகம்

கெந்தகக்குழித் தைலம் 809.

ஒன்பதாம் பாகம்

சூலை பேதிமாத்திரை 1234.

பத்தாம் பாகம்

கிரந்திப் புண்தூள் 1513. மேக எண்ணெய் 1521.

அழிரணத்துக்கு :—

நான்காம் பாகம்

பிரதாபலிங்க செந்தூரம் 521, இலிங்காதி பதங்கம் 534, பூரக் கட்டு 554, வாயுமாத்திரை 562,

ஆரும் பாகம்

கெந்தக்குழித் தைலம் 807.

ஏழாம் பாகம்

பாஷாண மேற்பூச்சு மாத்திரை 933. மகாவீரிய செந்தூரம் 956, மகாவீரிய சாந்த செந்தூரம் 957, குருசஞ்சீவி மெழுகு 981. இரச வங்கப் புகை 987. பார்வைப் புகை 988. நீலாஞ்சன யோகம் 995. சஞ்சீவி மாத்திரை 1035.

அழுகிப்போன புண்களுக்கு :—

பத்தாம் பாகம்

கிரந்திப்புண் மாத்திரை 1512.

அழுக்குத் தேம்பலுக்கு :—

இரண்டாம் பாகம்

கருவங்க செந்தூரம் 158.

ஏழாம் பாகம்

பாஷாணப் பிரயோகம் 940.

